டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in
agridoctor.in | 3.11.2025 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 136 - Madurai | Online Edition

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

# புது தில்லியில் உணவுத் திருவிழாவை மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் தொடங்கி வைத்தார்

புது தில்லி, டிச.2

புது தில்லியில் உணவுத் திருவிழா 2025-ஐ மத்திய ஊரக மேம்பாடு, வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் நேற்று தொடங்கி வைத்தார். மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அன்னபூரணா தேவியும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

அப்போது பேசிய மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான், நமது லட்சாதிபதி சகோதரிகள் தங்களது மகத்தான சக்தியை நிரூபித்துள்ளதாக கூறினார். உண்மையில் தங்களது கடின உழைப்பால், வளர்ச்சி, மேம்பாடு மற்றும் வளமையின் புதிய சகாப்தத்தைப் படைத்துள்ளதாகத் தெரிவித்தார். தற்போது 25 மாநிலங்களைச் சேர்ந்த லட்சாதிபதி சகோதரிகளில் பலர் தங்களின் சிறப்புகள், கடின உழைப்பு, அர்ப்பணிப்புடன் ஒட்டு மொத்த நாட்டிற்கும் வழிகாட்டுவதாக கூறினார். நமது சகோதரி களின் மேம்பாட்டிற்கு பிரதமர் நரேந்திர மோடி உறுதி பூண்டுள்ள தாகவும் அக்கனவை நிறைவேற்ற மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகம் தொடர்ந்து பணியாற்றி வருவதாகவும் சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.



# வேளாண் சாகுபடியில் சிறந்த நடைமுறைகள் என்ற தலைப்பில் பண்ணைப்பள்ளி



விருதுநகர், டிச.2

விருதுநகர் வட்டாரம், விரிவாக்க சீரமைப்பு திட்டம் 2025-26ன் கீழ் வடமலைக்குறிச்சி கிராமத்தில் பண்ணைப் பள்ளி என்ற இனத்தின் கீழ் பருத்தி பயிர் சாகுபடியில் சிறந்த வேளாண் சாகுபடி நடைமுறைகள் என்ற தலைப்பில் 2.12.25 அன்று விருதுநகர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கமீலஸ் சி லீமாரோஸ் தலைமையில் நடைபெற்றது.

இப்பண்ணைப்பள்ளி பயிற்சி வகுப்பில் ஒருங்கிணைந்த களை மேலாண்மை மற்றும் நீர் மேலாண்மை குறித்து தூண்டில்காளை மண்ணியல்துறை, தேர்ந்தெடுக்கப்பட்ட 25 விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கினார்.

வேளாண் அலுவலர் கிருஷ்னப் பிரியா உயிர் உரங்களின் முக்கியத்துவம் குறித்த விரிவாக பேசினார், உதவி வேளாண்மை அலுவலர்கள் பொன்முடி மற்றும் சதிஷ்குமார் ஆகியோர் பருத்தி சாகுபடி சார்ந்த வேளாண் மற்றும் வேளாண் விற்பனை துறை சார்ந்த திட்டங்களை எடுத்துரைத்தனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் இராஜேஸ் நன்றியுரை வழங்கினார்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# காளான் வளர்ப்பு பயிற்சி

கோயம்புத்தூர், டிச.2

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர் நோயியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் காளான் வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன்படி இம்மாதத்திற்கான பயிற்சியானது 5.12.25 வெள்ளிக்கிழமை அன்று அளிக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர் பயிற்சி நாளன்று பயிர் நோயியல் துறையில் பயிற்சிக் கட்டணமான ரூ.850/நபர் (வரி கட்டணம் உட்பட) செலுத்தி பயிற்சிக்கு பதிவு செய்து பயிற்சி திட்டத்தில் பங்கேற்கலாம். கல்லூரி மாணவர்களுக்கு ரூ.590/நபர் (அடையாள சான்று அவசியம்).

பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி நேரம் : காலை 10.00 முதல் மாலை 5.00 மணி வரை.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி : 0422 - 6611336, 6611226, அலைபேசி : 96294 96555, 63792 98064, மின்னஞ்சல் : pathology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்




கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# கரையான்களைக் கட்டுப்படுத்த பாரம்பரியத் தொழில்நுட்பங்கள்

கரையான்கள் பயிர் சாகுபடியில் ஒரு பிரச்சனையாக உள்ளது. இதைக் கட்டுப்படுத்தப் பல பாரம்பரிய முறைகள் உள்ளன. அவை :

● பிரண்டை செடி (Cissus quadrangularis) மற்றும் ஆமணக்கு செடியை வயலைச் சுற்றியும் நடுவதன் மூலம் கரையான்களைக் கட்டுப்படுத்தலாம்.



● நாற்றாங்காலில் வேப்ப இலைகளைப் பரப்பி விட்டுக் கரையான் தாக்குதலைத் தவிர்க்கலாம்.

● வேப்பம் புண்ணாக்கைச் சாக்கில் வைத்துக் கட்டி பாசன வாய்க்காலில் வைப்பதால் கரையான் தொந்தரவுக் குறைகிறது.

● மானாவாரி நாற்றங்காலில் கரையான்களின் தொந்தரவு அதிக அளவில் உள்ளது. இதற்கு வேப்ப இலைகளைப் பரப்புவதுடன். செம்மறி ஆட்டு முடி மற்றும் மனித முடியையும் சேர்த்து வைத்தால், இதை உண்ணும் கரையான்கள் இறந்து விடும்.

● கேழ்வரகுப் பயிரின் வேரிலிருந்து எடுக்கும் கசாயத்தை பயிர் வேர்களைச் சுற்றி ஊற்றி விடுவதால் கரையான்களின் தாக்குதல் குறையும்.

● மரக்கன்றுகள் நடும் முன்னர், நடும் குழியில் உலர்ந்த இலைகள் மற்றும் குப்பைகளை போட்டு எரித்த பின்னர் நடுவதால் கரையான்கள் வராது. அதே போல சாம்பலைத் தூவி விட்டுப் பின்னர் நட்டாலும் கரையான் தாக்குதல் இருக்காது.

● புகையிலையை அறுவடை செய்த பின்னர் அதன் கழிவுத் தண்டுகள் மற்றும் வேர்களை உழுது விடுவன் மூலம் கரையான் களைக் கட்டுப்படுத்தலாம்.

● எருக்கன் செடி இலைக் கரைசலைக் கரையான் தாக்கிய இடங்களில் ஊற்றிக் கட்டுப்படுத்தலாம்.

● ஐந்து சதவிகிதம் சாதாரண உப்புக் கரைசலை மர தண்டுப் பகுதியில் தெளிப்பதால் கரையான்கள் வராது.

● போரிக் அமிலத் தூளைத் தெளித்து விவசாயக் கரையான்களை எளிதில் கட்டுப்படுத்தலாம். மேலும் தண்ணீரில் கரைத்துத் தெளிப் பான்கள் மூலம் தெளித்தும் கட்டுப்படுத்தலாம் என சேலம் மாவட்டம், நங்கவள்ளி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா கூறினார்.





**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.

இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

நன்றி

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# கம்பு சாகுபடியில் உயிர் ஊக்கிகளின் செயல்திறன் மதிப்பிடுதல் பயிற்சி

திருவண்ணாமலை, டிச.2

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயமுத்தூரில் உள்ள பயிர் மேலாண்மை இயக்ககம், இயற்கை வள மேலாண்மை இயக்ககம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், அத்தியந்தலில் உள்ள சிறுதானிய மகத்துவ மையம் இணைந்து நடத்தும், தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் உயிர் ஊக்கிகளின் செயல்திறன் மதிப்பிடு தமிழ்நாட்டில் ஆறு மண்டலங்களில் இந்த திட்டம் செயல்படுத்தபட்டு வருகின்றது.




இந்த திட்டத்தில் கம்பு சாகுபடியில் உயிர்ஊக்கிகளின் செயல்திறன் மதிப்பிடுதல் தொழில்நுட்ப பயிற்சி சிறுதானிய மகத்துவ மையம், அத்தியந்தலில் 1.12.25 அன்று நடத்தப்பட்டது.

சிறுதானிய மகத்துவ மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ம.வைத்தியலிங்கன் வரவேற்புரையும் மற்றும் இந்நிலையத்தின் செயல்பாடுகள் பற்றி தெளிவாக கூறினார்.

இப்பயிற்சியை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் கோயம்புத்தூரில் உள்ள பயிர் மேலாண்மை இயக்குநர் முனைவர் எம்.கே.கலாராணி தலைமை வகித்து இத்திட்டத்தை பற்றியும் மற்றும் கம்பு சாகுபடியில் உயிர்ஊக்கிகளின் செயல் குபாடுகள் பற்றிய தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கண்ணகி உயிர் உரங்களின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கமாக கூறினார்.

திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் சி.மாரியப்பன், மண்புழு உரத்தின் நன்மைகளையும் முக்கியத்து வத்தைப் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். இத்திட்டத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர் ப.அய்யாதுரை, விவசாயிகள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்தார் மற்றும் நன்றியுரை கூறினார்.

இப்பயிற்சியில் ருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டராங்களிலிருந்தும் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் ஒரு மாத கால நுண்ணீர் பாசன தொழில்நுட்ப வல்லுநர் திறன் மேம்பாட்டு பயிற்சி

கோயம்புத்தூர், டிச.2

தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இணைந்து, தமிழ்நாடு இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு வழங்கும் திட்டமான வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ், ஒரு மாத கால நுண்ணீர் பாசன தொழில்நுட்ப வல்லுநர் திறன் மேம்பாட்டு பயிற்சி வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இந்த பயிற்சி நீர் மற்றும் புவியியல் ஆராய்ச்சி மையம், கோயம்புத்தூர் வளாகத்தில் 25 வேளாண் பட்டதாரிகளை கொண்டுசிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.



நுண்ணீர் பாசன தொழில்நுட்பங்களில் வேலைவாய்ப்பு உருவாக்கம், தொழில்துறை தேவைகளை பூர்த்தி செய்யும் தொழில்நுட்ப திறன்களை உருவாக்குதல் மற்றும் இளைஞர்களை நவீன தொழில்துறையில் பணியாற்றக் கூடிய வல்லுநர்களாக மாற்றுதல் இந்த நோக்கத்துடன், TNAU - TN Skill Vetri Nichayam பயிற்சிகள், இளைஞர்களை நடைமுறை அனுபவமிக்க தொழில்நுட்ப நிபுணர்களாக உருவாக்குகின்றன. இந்தப் பயிற்சியின் ஒரு முக்கிய அங்கமாக, பயிற்சி பெறும் பட்டதாரிகள் இந்தியாவின் மிகப்பெரிய பம்ப் உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான கோயம்புத்தூர் ஆக்வாசப் என்ஜினியரிங் (Aqua Group) தொழிற்சாலைக்கு தொழில்துறை வெளிப்புறப் பயணமாகச் சென்றனர்.

பம்ப் தொழில்துறையின் சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்களை மாணவர்களுக்குப் பகிர்ந்து முக்கிய அறிவூட்டலை வழங்கியது.

**பயிற்சியின் போது வழங்கப்பட்ட தொழில்துறை அடிப்படையிலான பயிற்சிகள்**

- நுண்ணீர் பாசனத்திற்கான தகுந்த பம்ப் தேர்வு

- பம்ப் இயக்கம், பராமரிப்பு மற்றும் சரி செய்தல் (Troubleshooting)

- மின்சார சிக்கனத்திற்கான பம்ப் ஒருங்கிணைப்பு நுட்பங்கள்

- நுண்ணீர் பாசன அமைப்புகளில் பம்புகளின் பயன்பாட்டுத் திறன்கள்பயிற்சி அமர்வை நிறுவனத்தின் மார்க்கெட்டிங் மேலாளரான வி.ஏ.சுரேஷ்குமார் ஒருங்கிணைத்தார். மேலும், தொழில்நுட்ப நிபுணர்கள் முரளி (தரம்), யு.வி. ரவி (Unit–4 தலைவர்), சாஹுல் (டிசைன்), ராம்பிரசாத் (பயிற்சி அதிகாரி), கிருஷ்ண பிரசாத் (டிசைன்) வழங்கிய நேரடி காட்சிப் பாடங்கள் மற்றும் விளக்கங்கள் மாணவர்களுக்கு தொழில் உலகின் உண்மையான நடைமுறைகளைப் புரியச் செய்தன. இந்த பயணத்தின் சிறப்பு அம்சமாக, Industry 4.0 தொழில் நுட்பங்களில் அடங்கிய ரோபோடிக்ஸ், தானியக்க உற்பத்தி மற்றும் மேம்பட்ட Quality Control நடைமுறைகளை மாணவர்கள் நேரடியாகக் காணும் வாய்ப்பு கிடைத்தது.

இந்த திறன் மேம்பாட்டு திட்டம், நீர் மற்றும் புவியியல் ஆராய்ச்சி மையம் இயக்குநர் முனைவர் எஸ்.பழனிவேலன் வழிகாட்டுதலிலும், பாட ஒருங்கிணைப்பாளர்கள் பேராசிரியர் முனைவர் வீ.ரவிக்குமார் மற்றும் முனைவர் எஸ்.செல்வகுமார், துல்லியமான திட்டமிடலிலும் நடத்தப்பட்டது. பேராசிரியர்கள் பயிற்சி பெறுவோருடன் தொழிற்சாலை பயணத்தில் கலந்து கொண்டு, தொழில் சார்ந்த கற்றல் அனுபவம் ஈர்ப்புடனும் பயனுடனும் அமையச் செய்தனர். இந்த தொழில் துறை பயணம், வேளாண் பட்டதாரிகளுக்கு பம்ப் உற்பத்தி துறையின் நவீன தொழில்நுட்ப சூழலை அறிந்து கொள்ளும் முக்கிய வாய்ப்பை வழங்கியது. இதன் மூலம் மாணவர்கள் பாசன தொழில்நுட்ப துறையில் மேலும் தரமான வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கான திறனை வளர்த்துக் கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின் கீழ் 7 பூங்காக்களுக்கு ஒப்புதல்

புது தில்லி, டிச.2

ஜவுளித்துறையில் முதலீடுகளை அதிகரிப்பதற்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் ஏற்றுமதிகளுக்கு ஊக்கம் அளிப்பதற்கும் அமைச்சகம் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தை அமல்படுத்தி வருகிறது. நாடு முழுவதும் ஜவுளி உற்பத்தி மையங்களில் நவீன உள்கட்டமைப்பு உலகத்தரம் வாய்ந்த ஜவுளி பூங்காக்களை அமைப்பதற்கு ஆதரவளிக்கும் வகையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், மகாராஷ்டிராவில் 12 பூங்காக்கள் உட்பட 50 பூங்காக்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 30 பூங்காக்கள் பணி நிறைவடைந்துள்ளது. இதுவரை மத்திய அரசு மானியமாக ரூ.1,532 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 7 இடங்களில் பிரதமரின் மிகப்பெரிய ஒருங் கிணைந்த ஜவுளி பிராந்தியம் மற்றும் ஆயத்த ஆடை பூங்காக்கள் அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழ்நாட்டில் விருதுநகர், தெலங்கானாவில் வாரங்கல், குஜராத்தில் நவ்சாரி, கர்நாடகாவில் கல்புருகி, உத்தரப் பிரதேசத்தில் லக்னோ, மத்தியப் பிரதேசத்தில் தார், மகாராஷ் டிராவில் அமராவதி ஆகிய இடங்களில் 2027-28 வரை 7 ஆண்டுகளுக்கு ரூ.4,445 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிரதமரின் மித்ரா பூங்கா மூலம் 3 லட்சம் வேலைவாய்ப்புகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் உருவாகும். தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின் கீழ், 7 பூங்காக் களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை மக்களவையில் நேற்று ஜவுளித்துறை இணையமைச்சர் பபித்ரா எழுத்துப் பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்தார்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW. isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# சொக்கப்பனை கொளுத்துவது ஆன்மீகமா? அறிவியலா?



நம்முடைய வாழ்வியல் முறைகளை அலசி ஆராய்ந்து பார்க்கும் போது மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், ஒரு விளக்கமும் உட் சென்று பார்த்தால் ஆச்சரியப்படக்கூடிய அறிவியல் விளக்கமும் இருக்கும். அந்த வகையில் திருக் கார்த்திகை திரு நாளில் சொக்கப்பனை-யை கொளுத்துவது தான். இதை ஆன் மீகமாகவும் அறிவியலாகவும் அதே நேரத்தில் விவசாயத்தில் பூச்சி விரட்டியாகவும் பார்க்கப்படுவதுஎன்பதை இந்த பதிவில் பார்ப்போம்.

**சொக்கப்பனை கொளுத்துவது ஆன்மீகமே?**

திரு கார்த்திகை திருநாளிலும் அதை அடுத்த 2ம், 3ம் நாளில் அனைத்து சிவலாயங்களிலும் பூலோக விருட்மாக கருதப்படும் பனை மரத்தை வெட்டி ஆலயத்தின் முன் முற்றத்தில் நட்டு அதில் சில அடி உயரத்திற்கு பனை ஓலைகளை கொண்டு கூம்பு வடிவில் அமைப்பார்கள். இந்த அமைப்பு 'சொக்கப் பனை' என்று அழைக்கப்படும். அது பேச்சு வழக்கில் சொக்கப் பானை' என்று கூறப்படுகிறது. பஞ்ச மூர்த்திகளுக்கு தீபார தனை காட்டிய பின் அந்த தீபச்சுடாரல் 'சொக்கப்பனை' யை கொளுத்துவார்கள். அதை ஆன்மீகவாதிகள் அக்கினிமய லிங்கமாக தரிசிப்பார்கள். இதை நிகழ்வு எப்படி அறிவியலுடன் ஒத்துப் போகிறது என்பதை பார்ப்போம்.

**சொக்கப்பனை அறிவியலா? எப்படி?**

கார்த்திகை மாதம் பருவமழையின் உச்ச காலம். சாகுபடி எல்லாம் முடிந்து பயிர்கள் செழிப்பாக வளர்ந்திருக்கும் இந்த நேரத்துல் விவசாயிகளுக்கு பூச்சிகளால் தான் பிரச்சனை. அதை எப்படி கட்டுப்படுத்துவது என தெரியாத நிலையில் இதை போன்ற சொக்கப்பனை கொளுத்துவதால் அதுவும் முன் இருட்டில் தாய் அந்துபூச்சிகள் வெளிச்சத்தை நோக்கி சாரை சாரையாக வந்து மாட்டிக் கொள்ளும்.

கூட்டுப்புழுக்களிலிருந்து வரும் தாய் அந்துப்பூச்சி வருகின்ற காலமிது. அது முட்டையிட்டு அவற்றிலிருந்து புழுக்கள் உருவாக்கி பயிர்களின் இலைகளை சேதப்படுத்தும். எனவே அந்த காலத்தில் நம்முடைய முன்னோர்கள் அவற்றை தடுக்க ஓட்டு மொத்தமாக ஊர் கூடி இந்த சொக்கப்பனை கொளுத்துவார்கள். இன்றைய அறிவியலுடன் ஒப்பீட்டு பார்க்கும் போது இது ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளில் ஒன்றான 'விளக்கு பொறி' (LIGHT TROPS) நினைப்படுத்துகிறது. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு அம்சமாக விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் இந்த நிகழ்வு சொக்கப்பானை கொளுத்துதல் உள்ளன. நம்முடைய முன்னோர்கள் அன்று செய்த செயல்கள்யாவும் இன்று ஏதோ ஒரு வகையில் அர்த்தமுள்ளதாக உள்ளது என்பதற்கு இந்த நிகழ்வு ஒரு எடுத்து காட்டாகும்.

பனை ஓலையை எரிப்பதால் மனிதனுக்கு எந்த பாதிப்பும் இல்லை. அந்த புகை பூச்சிகளை ஓட ஓட விரட்டும். மற்ற ஓலைகள் பச்சையாக இருக்கும் போது எரியாது. ஆனால் பனை ஓலை எரியக்கூடியது. அதனுடைய சாம்பலை எடுத்து பயிர்களின் மீது இன்றும் கூட விவசாயிகள் தூவுவதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். தீப திருநாள் உழவர்களுக்கு பயனுள்ள நாளாக, ஆன்மீகமும் அறிவியலும் கலந்த நாளாக நாம் பார்க்கிறோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# மண்புழு உரம் தயாரிப்பு குறித்த விவசாயிகள் பயிற்சி



விருதுநகர், டிச.2

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வேளாண்மைத் துறை விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் நமஸ் கரித்தான்பட்டி கிராமத்தில் மண்புழு உரம் தயாரித்தல் பற்றிய விவசாயிகள் பயிற்சிய ானது 2.12.25 அன்று நடைபெற்றது.

இது குறித்து சிவகாசி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இராமசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சிவகாசி வட்டாரம், நமஸ்கரித்தான்பட்டி கிராமத்தில் விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் மண்புழு உரம் உற்பத்தி தொடர்பான விவசாயிகள் பயிற்சியானது 2.12.25 அன்று நடைபெற்றது. இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் இராமசாமி தலைமையேற்று வேளாண்மைத் துறை மானியத்திட்டங்கள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். திருவில்லிபுத்தூர், பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் (பொ) விமலா கலந்து கொண்டு விவசாயிகளுக்கு மண்வளம், மண்ணில் உள்ள சத்துக்கள், பயிர்களுக்கு தேவையான அத்தியாவசிய சத்துக்கள் பற்றியும், மண்ணில் அங்கக கரிமத்தினை அதிகரிக்க கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள் பற்றியும், மண்வள பாதுகாப்பில் அங்கக உரங்களின் அத்தியாவசியம் பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார். இராஜபாளையம் வட்டாரத்தினை சேர்ந்த முன்னோடி இயற்கை விவசாயி மணி கலந்து கொண்டு மண்புழு உரம் தயாரித்தல் தொழில்நுட்பங்களையும் மண்புழு உரத்தில் உள்ள சத்துக்கள் விபரம் பற்றியும், பயிர்களுக்கு மண்புழு உரம் பயன்படுத்தும் அளவு முறைகள் பற்றியும், அங்கக பூச்சி விரட்டிகள் தயார் செய்யும் முறைகள், அங்கக இடுபொருட்கள் தயார் செய்யும் முறைகள் பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும், இப்பயிற்சியில் துணை வேளாண்மை அலுவலர் சீனிவாசன் கலந்து கொண்டு வேளாண்மைத்துறை இடுபொருட்கள் பற்றி எடுத்துரைத்தார். பயிற்சியின் இறுதியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கணேஷ்குமார் நன்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் ஜெ.இராஜேஸ்வரி சிறப்பாக செய்திருந்தார்.

# இரசாயனமற்ற விவசாயத்தை ஊக்குவிக்க விவசாயிகளுக்க வேப்பமரக் கன்றுகள் 100% மானியத்தில் விநியோகம்

ராணிப்பேட்டை, டிச.2

வேம்பிலிருந்து கிடைக்கும் இலை, கொட்டை, எண்ணெய் முதலியவற்றை பயிர்ப் பாதுகாப்பில் பயன்படுத்தலாம் என ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் திலகவதி தெரிவித்தார்.






அவர் கூறுகையில், செயற்கைப் பூச்சிக் கொல்லிகளை தீங்கு செய்யும் பூச்சி நோய்களைக் கட்டுப்படுத்த பயன் படுத்துவதால் சுற்றுப்புறச்சூழ்நிலை மாசுபடுவதுடன், நன்மை செய்யக்கூடிய பூச்சிகள் அழியும் அபாயமும், நாம் உண்ணக் கூடிய தானியங்கள், பழங்கள் மற்றும் காய்கறிகளில் எஞ்சிய நஞ்சு கலந்து அதனை உண்ப தினால் பல்வேறு வகையான நோய்களுக்கு ஆளாகக் கூடிய சூழ்நிலை உள்ளது. செயற்கைப் பூச்சிக்கொல்லிகளை பயன் படுத்தும் போது, விவசாயிகள் உடனடியாக தங்களது பயிர்களில் பூச்சி நோய் தாக்குதலை கட்டுப்படுத்துகின்றனர். மாறாக, தாவரப் பூச்சிக் கொல்லிகளை பூச்சி நோய் கட்டுப்பாட்டிற்கு உபயோகிக்கும் போது சுற்றுப்புறச் சூழ்நிலை மாசுபடாது, நன்மை செய்யும் பூச்சிகளின் உற்பத்தி அதிகரிக்கும், தானியங் களில் எஞ்சிய நஞ்சு இருக்காது. ஆனால் தாவரப் பூச்சிக் கொல்லிகளின் செயல் திறன் பூச்சி நோய்க்கு எதிராக சற்றே மெதுவாக இருக்கும்.

வேப்பமரத்திலுள்ள பல்வேறு பாகங்கள், பயிர்களின் பூச்சி, நோய்களை தடுக்க உதவுகிறது. அவற்றில் வேப்பங்கொட்டை கரைசல் வேப்பிலைக் கரைசல், வேப்பம் புண்ணாக்கு கரைசல் மற்றும் வேப்ப எண்ணெய்க் கரைசல் போன்றவை மிக முக்கிய பங்கு வகுக்கிறது. அசாடிராக்டின் என்ற இராசாயனம், புழுக் களின் உடலில் சென்று தோல் உரிவதைத் தடுக்கிறது. வேம்புப் பொருட்களை பயிர்களுக்கு தெளிக்கும் போது தீமை செய்யக் கூடிய பூச்சிகள் பயிர்களை உண்ணவிடாமலும், முட்டையிட விடாமலும் தடுக்கிறது. பூச்சிகளின் இனப்பெருக்கத்தைத் தடுத்தும், முதிர்ந்த பூச்சிகளில் மலட்டுத் தன்மையை உண்டாக்கு கின்றது. அசாடிராக்டின் பயன்பாட்டுக்காக வேம்பினைப் பரவலாக்கம் செய்திடும் வகையில் வேப்ப மரக்கன்றுகள் 100% மானியத்தில் வேளாண்மைத் துறையின் வாயிலாக மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன. விவசாயத் குதிற்கு பயனளிக்கும் வேப்ப மரக்கன்றுகளை வயல் ஓரங்கள், தரிசு நிலங்கள் மற்ற இடங்களில் வளர்த்து பயன் பெறலாம். மேலும் விவரங்களுக்கு வாலாஜா வட்டார, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பயன் பெறுமாறு வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# துவரை வேர் அழுகல் நோய், அறிகுறிகள் மற்றும் மேலாண்மை (மேக்ரோபோமினா பேசியோலினா)

**நோய் பரவலுக்கு சாதகமான சூழ்நிலை**

1. வறண்ட மற்றும் மழைக்காலம்

2. ஒரே பயிரைத் தொடர்ந்து பயிரிடுதல்

3. மண்ணில் அதிக ஈரப்பதம் மற்றும் நீர்த்தேக்கம்

**அறிகுறிகள்**

● இந்நோய் இளம் செடிகளிலும் வளர்ந்த செடிகளிலும் தோன்றுகிறது. ஆரம்பத்தில் இலைகள் வாடத் தொடங்கு கின்றன.

● பின்பு இலைகள் காய்ந்து செடியும் காய்ந்து விடுகின்றன. நோய் தீவிரமாகப் பரவினால் தாக்கப்பட்ட செடிகளில் ஆணி வேரைத் தவிர மற்ற வேர்கள்யாவும் அழுகிவிடுகின்றன.

● ஆணி வேரின் மேல் பட்டை அழுகிச் சிதைந்து நார் நாராக உரிந்து விடுகிறது.

● நோயினால் பாதிக்கப்பட்ட செடியை மெதுவாக இழுத்தாலும் எளிதாக கையோடு வந்துவிடும் தாக்கப்பட்ட வேர்ப்பகுதியில் கடுகு போன்ற பூஞ்சானை இழை முடிச்சுகள் இணைந்திருக்கும்.





**மேலாண்மை**

**விதை நேர்த்தி**

● டிரைக்கோடெர்மா விரிடி டால்கம் பவுடர் 4 கிராம் அல்லது சூடோமோனாஸ் ஃபுளுரசன்ஸ் 10 கிராம் அல்லது கார்பன்டாசிம் 2 கிராம், 1 கிலோ விதைக்கு.

**உயிரியல் முறை**

● சூடோமோனாஸ் ஃபுளுரசன்ஸ் (அ) டிரைகோடெர்மா விரிடி (2.5 கிலோ ஹெக்டேர்) 50 கிலோ நன்கு மக்கிய தொழுவுரம் (அ) மணலில் கலந்து விதைத்த 30 நாட்கள் கழித்து இட வேண்டும்.

**இரசாயன முறை**

● பாதிக்கப்பட்ட இடத்தில் கார்பென்டாசிம் 1 கிராம்/1 லிட்டர் என்ற விகித்தில் கலந்து ஊற்ற வேண்டும்.

மேற்காணும் முறையில் துவரை வேர் அழுகல் நோயை கட்டுப்படுத்தலாம் என சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா தெரிவித்தார்.

# பயிர் காப்பீடு செய்ய வேளாண் உதவி இயக்குநர் அழைப்பு

விருதுநகர், டிச.2

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி வட்டாரத்தில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சம்பா நெல், சோளம், நிலக்கடலை மற்றும் எள் பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்த பயன் பெறலாம்.

விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள்/தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் அல்லது பொது சேவை மையங்களின் வாயிலாக பட்டா, அடங்கல், வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் மற்றும் ஆதார் அட்டை நகல் அகிய ஆவணங்களுடன் பயிர் காப்பீடு கட்டணத்தை உரிய விண்ணப்பத்தில் செலுத்த வேண்டும்.

நெல், சோளம் ஆகிய பயிர்களுக்கு பயிர் காப்பீட்டுக்கான காலக்கெடு 16.12.2025 மற்றும் நிலக்கடலைக்கு காப்பீட்டு செய்ய 30.12.2025 மற்றும் எள்ளுக்கு 31.1.2026 கடைசி நாள் ஆகும்.

எனவே, கடைசி நாள் வரை காத்திராமல் உடனே பயிர் காப்பீடு செய்து பெற நரிக்குடி வேளாண்மை உதவி இயக்குநர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நெல் வளர்ச்சிக்கு நீல பச்சை பாசியின் முக்கியத்துவம்

நெல் வயல்களிலும் நீர் தேக்கங்களிலும் வளரும் நீலப் பச்சைப் பாசி நெற்பயிருக்கு தழைச்சத்தை கிடைக்க செய்யும் முக்கியமான நுண்ணுயிர் உரமாகும். நீல பச்சை பாசியில் பல்வேறு வகையான பச்சைகள் உள்ளன. இந்த பச்சையம் இருப்பதால் இவை ஒளிச்சேர்க்கை மூலம் தேவையான சக்தியை தானே உற்பத்தி செய்து கொள்கின்றன.

நெல் பயிர்களில் எப்போதுமே நீரின் தேக்கம் இருப்பதால் இவை விரைந்து பெருகி வளர்ந்து நிற்பதற்கு தலை சத்தத்தை வழங்குகின்றன. இவை நீலம் கலந்த பச்சை நிறமாக இருப்பதால் இதற்கு நீலபச்சை பாசி என்று பெயர் நீலபச்சை பாசையில் நாஷ்டக் அனபினா போன்ற பல வகைகள் உள்ளன. இளம் செல்களில் பச்சையம் மிகுந்திருப்பதால் இவை ஒளிச் சேர்க்கை மூலம் கரிம பொருளையும் ஆற்றலையும் உற்பத்தி செய்கின்றனர். இவை வெளியிடும் ஆக்சிஜன் தண்ணீரில் கரைந்து ஆக்ஸிஜன் அளவை அதிகரிக்க பயன்படுகிறது.

ஆக்சிஜன் அதிகமாகவதால் தொடர்ந்து நீரில் மூழ்கியுள்ள நெல் வயல் மண்ணில் இரும்பு மற்றும் கந்தக சல்பேட் மிகுதியாகாமல் தடுக்கப்பட்டு வேருக்கு ஏற்படும் தீமை குறைகிறது. வைட்டமின் பி12 மற்றும் வளர்ச்சி ஊக்கிகளை சுரந்து பயிருக்கு நன்மை அளிக்கின்றனர். 10 கிலோ பாசி சில்லுகளை பொடி செய்து நட்ட பத்தாம் நாளில் 25 கிலோ தொழுஉரம் மற்றும் 25 கிலோ மணலுடன் கலந்து வயலில் சீராக தூங்க வேண்டும்.

களைக்கொல்லியை நட்ட 3 – 5 நாட்களில் பயன்படுத்தினால் நட்ட 15 ஆம் நாள் பாசி இடுவது நல்லது பாசி நிலைத்து வளர தொடர்ந்து மூன்று அல்லது நான்கு பருவங்கள் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் ஒரு எக்டரில் சுமார் 25 லிருந்து 30 கிலோ தழைச்சத்தை நிலை நிறுத்தலாம்.

இதனை சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டாரம், வேளாண்மை உதவி இயக்குனர் எஸ்.ஷீரின் விவசாயிகளுக்கு எடுத்துரைத்து உள்ளார்.

# இயற்கை முறையில் வாழை சாகுபடி



வாழை என்பது தமிழ்நாட்டின் முக்கியமான பழவகைகளில் ஒன்றாகும். வாழைப்பழம் நமது அன்றாட உணவிலும், சடங்குகளிலும், மருத்துவப் பயன்களிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. தற்போது வேளாண்மை துறையில் பலர் ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தி விளைச்சல் பெறுகின்றனர். ஆனால் இயற்கை வேளாண்மை வழியில் சாகுபடி செய்தால் மண் வளமும் நீடிக்கும், உற்பத்தியும் ஆரோக்கியமானதாக இருக்கும்.

## மண் மற்றும் இடம்

வாழை செடிக்கு தண்ணீர் வடிகால் வசதியுள்ள, நல்ல உயிரணு வளமிக்க மண் ஏற்றது. ஆழமான கரிசல் அல்லது சாண மண் சிறந்தது. மண்ணில் ஜீவாமிர்தம், பஞ்சகவ்யம், கண ஜீவாமிர்தம் போன்ற இயற்கை உரங்களை சேர்த்தால் மண் உயிர்ச்சத்துகள் அதிகரிக்கும்.

## நாற்று தயாரிப்பு

● சிறந்த, நோயற்ற தாய் செடிகளில் இருந்து சக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

● நாற்றுகளை நிழலில் வைக்காமல், வெயிலில் 2–3 நாட்கள் காயவைத்து, பின்னர் நடவு செய்யலாம்.

● நடவுக்கு முன் நாற்றுகளை வாடல் நோய் எதிர்ப்பு நுண்ணுயிர் கலவையில் அல்லது அரப்பொடி + நாட்டு சுண்ணாம்பு கலவையில் மூழ்க வைத்து வைக்கலாம்.

## நடவு முறை

● 6 X 6 அடி இடைவெளியில் குழிகள் தோண்டி, 2 அடி ஆழம் வரை உருவாக்க வேண்டும்.

● குழியில் பசு சாணம், களிமண், பனங்காய் இலை, சாம்பல் போன்றவை கலக்கி நிரப்ப வேண்டும்.

● மழைக்காலம் (ஜுலை – ஆகஸ்ட்) நடவு செய்ய சிறந்தது.

**நீர் மேலாண்மை**

● இயற்கை வேளாண்மையில் சொட்டு நீர் பாசனம் முறையால் நீர் சேமிப்பு மேற்கொள்ளலாம்.

● வாரத்திற்கு 2 – 3 முறை மிதமான நீர் அளிப்பது போதுமானது.

● மண் மூடாக்கு (Mulching) செய்து மண் ஈரப்பதம் பாதுகாக்கலாம்.

**உயிர் உரங்கள் மற்றும் நுண்ணுயிர் பயன்பாடு**

**ஜீவாமிர்தம் –** 15 நாட்களுக்கு ஒரு முறை பாய்ச்சவும்.

**பஞ்சகவ்யம் –** மாதத்துக்கு ஒரு முறை தெளிக்கவும்.

**வெர்மி காம்போஸ்ட் –** செடியின் வேர்ச்சுற்றில் 5 –10 கிலோ அளவு சேர்க்கவும்.

**பூச்சி மற்றும் நோய் மேலாண்மை**

● இலைச்சுருக்கு நோயைத் தவிர்க்க வேப்ப எண்ணெய் (5%) தெளிக்கவும்.

● நாற்று வேர் புழுவுக்கு எதிராக திரிபலா நீர், பூச்சி மருந்து காயம் போன்ற இயற்கை கலவைகள் பயன்படுத்தலாம்.

**அறுவடை**

● நடவு செய்த 10–12 மாதங்களில் வாழைப்பழக் கதிர்கள் அறுவடை செய்யத் தகுந்ததாகும்.

● அறுவடை செய்யப்பட்ட கதிர்களை நிழலில் காயவைத்து விற்பனைக்குத் தயாரிக்கலாம்.

**பயன்கள்**

● மண் வளம் இயல்பாக அதிகரிக்கும்.

● ஆரோக்கியமான, ரசாயனமில்லா பழம் கிடைக்கும்.

● நீண்டகாலத்தில் செலவு குறைந்து, நன்மை அதிகரிக்கும்.

**முடிவுரை :** இயற்கை வேளாண்மை வழியில் வாழைப்பழச் சாகுபடி செய்வது சுற்றுச்சூழலுக்கு உகந்ததும், விவசாயியின்

நலனுக்கும் பயனளிக்கும் முறையாகும். இதன் மூலம் நிலம், நீர், மனிதர்கள் அனைத்தும் ஆரோக்கியமாக வாழ முடியும்.





கட்டுரையாளர்கள் : **த.தமிழ்பாவை, உதவிப் பேராசிரியர் மற்றும் துறை தலைவர், தோட்டக் கலைத்துறை, முனைவர் க.கண்ணன், இணைப் பேராசிரியர் மற்றும் துறை தலைவர், பயிர் மேம்பாட்டுத் துறை, நாளந்தா வேளாண்மை கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. மின்னஞ்சல் : kannanseedtechnologist@ gmail.com**



# கால்நடைப் பண்ணைகளில் பொட்டாசியம் பெர்மாங்கனேட்டின் பயன்பாடுகள்

பொட்டாசியம் பெர்மாங்கனேட் என்பது அனைத்து மருந்துக் கடைகளிலும் எளிதில் கிடைக்கக்கூடிய ஒரு வேதிப்பொருளாகும். இது கால்நடைகளில் பாக்டீரியா மற்றும் பூஞ்சைத் தொற்றுகளை திறம்பட குறைக்கும் தன்மை பெற்றது. எனவே பொட்டாசியம் பெர் மாங்கனேட்டை கால்நடைப் பண்ணைகளில் பல்வேறு நோய் களைத் தாக்கும் கிருமிகளை அழிக்க சக்தி வாய்ந்த கிருமி நாசினி–யாக சிறப்பாக பயன்படுத்தலாம்.

**பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசல் தயாரிக்கும் முறை :** கால்நடைப் பண்ணைகளில் கிருமிகளின் வளர்ச்சியை கட்டுப் படுத்துவதற்கு சிறந்த கிருமி நாசினியாக பயன்படுத்தப்படும் பொட்டாசியம் பெர்மாங்கனேட கரைசலை முறையாக தயாரித்து சரியாக பயன்படுத்த வேண்டும். பொட்டாசியம் பெர்மாங்கனேட் என்பது மிகச்சிறிய உப்புக்கற்கள் போன்று அடர்ந்த ஊதா கருப்பு நிறத்தில் இருக்கும். இதை 4–5 கற்கள் எடுத்து 1 லிட்டர் சுத்தமான தண்ணீரில் இட்டு நன்கு கலக்க வேண்டும். கரைசலானது டிசம்பர் பூ நிறத்தில் இருக்க வேண்டும். ஊதா நிறத்தில் இருந்தால் இன்னும் சிறிது தண்ணீர் விட்டு கலக்கி டிசம்பர் பூ நிறத்திற்கு கொண்டு வர வேண்டும். இந்த கரைசலை தேவைப்படும் பொழுது கரைத்து நாம் கால்நடைப் பண்ணைகளில் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

## பயன்படுத்தும் முறை

**காயங்கள் :** கால்நடைகளுக்குக் காயங்கள் ஏற்பட்டால் முதலில் செய்ய வேண்டியது யாதெனில் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசல் கொண்டு நன்கு கழுவிய பின் காயங்களுக்கான களிம்பை தடவுவதன் மூலம் காயங்கள் விரைவில் ஆறி விடும்.

**கொம்பு முறிவு :** மாடுகளுக்கு கொம்பு முறிவு ஏற்பட்டால் இரத்தக் கசிவு அதிகம் இருக்கும். பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசல் கொண்டு நன்கு கழுவிய பின் மருந்திட்டு கட்டுப் போட வேண்டும்.

**மடி நோய் :** கறவை மாடுகளின் மடியை பாக்டீரியா மற்றும் பூஞ்சை நோய்க் கிருமிகள் தாக்கி மடிநோய் வராமல் தடுப்பதற்கு தினமும் பால் கறவைக்கு முன்னும் பால் கறந்த பின்னும் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசல் கொண்டு கழுவுவதன் மூலம் மடிநோய் ஏற்படுவதைத் தடுக்கலாம். நீர்த்தெளிப்பான் மூலமும் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலை மடியிலும் காம்பிலும் தெளிக்கலாம்.

**காணை நோய் :** காணை நோயால் பாதிக்கப்பட்ட மாடுகள் மற்றும் ஆடுகளின் வாய் மற்றும் கால் குளம்புகளில் புண்கள் ஏற்பட்டு தீவனம் சாப்பிட முடியாமலும் நடக்க முடியாமலும் அவதிப்படும். அவ்வாறு காணை நோயால் வாய் மற்றும் குளம்புகளில் ஏற்பட்ட புண்களில் நோய்த் தொற்று ஏற்படாமலும் புண்கள் விரைவில் ஆறுவதற்கும் தினமும் காலை மற்றும் மாலை இரு வேளையாக பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசல் கொண்டு நன்கு கழுவிய பின் வாய்ப் புண்ணிற்கு போரிக் பவுடரை தேங்காய் எண்ணெய் குழைத்து தடவ வேண்டும். கால் புண்ணிற்கு வேப்ப எண்ணெய் கலந்த மூலிகை மருந்தோ அல்லது மருந்துக்கடைகளில் வாங்கும் மருந்தை இட்டு குணப்படுத்த வேண்டும்.


**உறுப்பு வெளித்தள்ளுதல் (அடி தள்ளுதல்) :** சில மாடுகளுக்கு கன்று ஈனுவதற்கு முன்னால் அல்லது கன்று ஈன்ற பிறகு அடி தள்ளுதல் அல்லது உறுப்பு வெளித் தள்ளுதல் ஏற்படும். நோய்க் கிருமிகள் கர்ப்பப்பையை பாதிக்காமல் இருப்பதற்கு பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசல் கொண்டு நன்கு கழுவிய பின் கர்ப்பப்பையை மண் அல்லது தூசி படாதவாறும், ஈக்கள் மொய்க்காதவாறும், காக்கைகள் கொத்தாதவாறும் சுத்தமான ஈரத் துணி கொண்டு மூடி விட்டு கால்நடை மருத்துவரின் உதவி கொண்டு தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டும்.

**கால் குளம்பு நோய் :** மாடுகள் மற்றும் ஆடுகள் ஈரமான சகதியிலோ அல்லது சாணத்திலோ அதிக நேரம் நிற்கும் பொழுது கால் குளம்புகள் பாதிக்கப்பட்டு கால் குளம்பு நோய் ஏற்பட்டு பாதிக்கப்பட்ட கால்நடைகளில் கால் குளம்புகள் வீங்கி நொண்டிக் கொண்டிருக்கும். அவ்வாறு பாதிக்கப்பட்ட கால்நடைகளின் குளம்புகளை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசல் கொண்டு நன்கு கழுவிய பின் தகுந்த மருந்துகளைத் தடவும் பொழுது கால் குளம்பு நோயை விரைவில் குணப்படுத்த முடியும்.

**கொட்டகை மற்றும் கொட்டகையின் சுற்றுப்புறம் :** கால்நடைகளின் கொட்டகையிலும் கொட்டகையைச் சுற்றிலும் வாரம் இரு முறை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலை நீர்த் தெளிப்பான் மூலம் தெளிப்பதன் மூலம் கொட்டகையில் தேங்கியிருக்கும் நோய்த் தொற்றினை ஏற்படுத்தும் நோய்க்கிருமிகளை அழிக்க முடியும்.

**தகவல் : டாக்டர் இரா. உமாராணி, பேராசிரியர், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம், திருப்பரங்குன்றம், மதுரை - 625 005.**

தலைக் கவசம் உயிர்க் கவசம்


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333